மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதி நிர்வாகம், தகவல் தொழில்நுட்பவியல், சட்டத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர்கள், தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கின்றேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. புகழேந்தி (குறுக்கீடுகள்)

3. நிதியொதுக்கச் சட்டமுன்வடிவை விவாதித்து நிறைவேற்றக் கோரல்–தொடர்ச்சி

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் வந்தவுடனே எடுத்துக்கொள்ளலாம் என்று தெரிவித்தீர்கள். அவர் வந்து விட்டார். அவர் இங்கேதான் இருக்கிறார் என்று நினைக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. அவர் வரட்டும். அவர் வரும்போது சொல்லச் சொல்கிறேன். (குறுக்கீடு)

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: விவாதத்திற்கு நடுவிலே எடுத்துக் கொள்ளலாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வரும்போது கேளுங்கள். நீங்கள் கேட்டதற்குப் பதில் சொல்லச் சொல்கிறேன். திரு. புகழேந்தி.

திரு. இ. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் மாண்புமிகு நிதியமைச்சருடைய வருகையை நிரம்ப ஆவலாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். சொல்லுங்கள்.

@ 165 முதல் 224 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I, II மற்றும் III ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

TRUTH ALONE TRIUMPHS

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி ஒதுக்க மசோதா, அரசமைப்புச் சட்டத்தின் 204 பிரிவின்கீழ் தாக்கல் செய்யப்படுகிறது. எந்த மசோதாவாக இருந்தாலும், அது எவ்வாறு நிறைவேற்றப்பட வேண்டும் என்பதற்கு அவை விதிகள் தெளிவாக இருக்கின்றன. நிதி ஒதுக்க மசோதாவின் அடிப்படையை மாற்றக்கூடிய வகையில் திருத்தம் எதையும் கொண்டு வரக்கூடாது என்பதைத் தவிர, மற்ற எல்லா வகையிலும் மசோதாக்களைப் பற்றிய விதிகள் பொதுவாகவே வகுக்கப்பட்டிருக்கின்றன. எந்த மசோதாவாக இருந்தாலும் அறிமுகம், விவாதம், பதிலுரை போன்ற கட்டங்களைத் தாண்டாமல் சட்டமன்றத்தில் நிறைவேற்ற முடியாது. எனவே, விவாதம் இல்லாமலே நிதி ஒதுக்க மசோதாவை நிறைவேற்ற முற்படுவது அரசமைப்புச் சட்ட விதிகளுக்கும், சட்டமன்ற விதிகளுக்கும் புறம்பானதாகும். எனவே, இந்த முறை ஏற்கத்தக்கதுதானா என்ற ஒழுங்குப் பிரச்சினைமீது தீர்ப்பு அளிக்குமாறு தங்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாம் ஏற்கெனவே... (குறுக்கீடு)

திரு. துரைமுருகன்: அத்துடன் சேர்த்து ஒன்றைச் சொல்லி விடுகிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, அலுவல் ஆய்வுக் குழுவில்கூட இதை விவாதமின்றி நிறைவேற்றலாம் என்று நாங்கள் யாரும் ஒத்துக்கொள்ளவில்லை. காரணம், எதிர்க்கட்சிக்காரர்களுக்கு இருக்கிற ஒரு மிகப் பெரிய பிரச்சினை, Appropriation Bill-ல் பேசும்போது...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. அலுவல் ஆய்வுக் குழுவிலே ஏகமனதாக நிறைவேற்றப்பட்டவைதான் எல்லாம். நிகழ்ச்சி நிரல் முழுவதுமே அலுவல் ஆய்வுக் குழுவிலே ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுத்தான் பத்திரிகைகளுக்கு எல்லாம் தரப்பட்டது, வெளியிடப்பட்டது. அது அலுவல் ஆய்வுக் குழுவிலே முடிவு செய்யப்பட்ட ஒன்று.

முற்பகல் 11–20

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: நிதி ஒதுக்க மசோதாவைப் பொறுத்தவரையில், விட்டுப்போன விஷயங்கள் எல்லாம் பேசுவதற்கு, அதைத்தான் நாங்கள் பயன்படுத்திக் கொள்கிறோம். Vote on Account–ன் போது...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பயன்படுத்துகிறீர்களா, பயன்படுத்தவில்லையா என்பது வேறு. நம் அலுவல் ஆய்வுக் குழுவில், நானே எல்லாவற்றையும் வாசித்தேன். நீங்கள் எல்லாவற்றையும் கேட்டீர்கள். சரி என்று ஒத்துக்கொண்டுதான் அதற்கு அப்புறம் முடிவு பண்ணியது அது. அதற்கு அப்புறம்தான் (குறுக்கீடுகள்)

திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்கு மாறுபட்ட கருத்து இருந்தால் நாங்கள் ஒத்துக் கொள்ளவில்லையென்று, அப்போதே அன்றைக்கே சொல்லியிருக்கலாம். அதிலே ஒன்றும் இல்லையே? உங்களுக்கு மாறுபட்ட கருந்து இருந்தால், இதை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று அன்றைக்கே சொல்லியிருக்கலாம். அன்றைக்கு நீங்கள் ஏற்றுக் கொண்டதால்தானே நாங்கள் வெளியிட்டோம் அதை. (குறுக்கீடுகள்)

திரு. துரைமுருகன்: ஆனால், அதை நான் அன்றைக்கே சொன்னேன். உங்களை நம்பித்தான் நாங்கள் கையெழுத்துப் போடுகிறோம்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதையும் மாற்றவில்லை. (குறுக்கீடுகள்)

திரு. துரைமுருகன்: நீங்களே சொல்லுங்கள், நீங்களே சொல்லுங்கள் யாராவது ஒரு எதிர்க்கட்சி...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதையும் மாற்றவில்லை. (குறுக்கீடுகள்)

திரு. துரைமுருகன்: நீங்களே சொல்லுங்கள், நீங்களே சொல்லுங்கள். யாராவது ஒரு எதிர்க்கட்சி Appropriation–ல் விவாதம் வேண்டாம் என்று சொல்வார்களா? (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சொன்னீர்கள். சொன்னதற்கு உரிய விளக்கமும் தெரிவிக்கப்பட்டது. உரிய விளக்கமும் சொல்லப்பட்டது. நான் எல்லாவற்றையும் வாசித்துக் காட்டினேன். உங்கள் ஒப்புதலைப் பெற்றுத்தான் அது வெளியிடப்பட்டது. (குறுக்கீடுகள்)

திரு. துரைமுருகன்: It is equal to budget and Governor Address மாதிரி. ஏதோ பேசுவதற்கு வாய்ப்பு. எனவே அதிலே....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுடைய கருத்தைச் சொல்லிவிட்டீர்கள். ஏகமனதாக முடிவு செய்ததுதான் அது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: நான் சொல்லி முடித்து விடுகிறேன். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. Vote on Account–ல் discussion இல்லாமல்தான் இதுவரைக்கும் நடைமுறையில் இருந்து வருகிறது. அந்த நடைமுறையை ஒட்டித்தான் அலுவல் ஆய்வுக் குழுவில் பேசப்பட்டது. அலுவல் ஆய்வுக் குழுவில் அனைவருமே ஒத்துக்கொண்ட ஒன்று. அதைத் தற்போது இந்த அவையில் எழுப்புவது முறையானது அல்ல. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. இதிலே மாறுபட்ட கருத்து எதையும் சொல்லவில்லை.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: நாங்கள் கேட்டபோது, Vote on Account–ல் முன்பண மானியக் கோரிக்கை மீதான விவாதம் என்று நான் கேட்கவில்லை. அதைக் கேட்கவில்லை. தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார். நான் கேட்பது நிதி ஒதுக்க மசோதா....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், அன்றைக்கே, திரு. துரைமுருகன் அவர்களும், நீங்களும் ஒரு கருத்தைச் சொன்னது உண்மை. அதற்கு அப்புறம் நான் விளக்கம் சொன்னேன். சொன்னதற்குப் பிறகு ஏகமனதாக ஏற்றுக்கொண்டுதான் வெளியிடப்பட்டது. (குறுக்கீடுகள்)

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: ஆக, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Appropriation Bill-ஐப் பொறுத்தவரைக்கும், நிதி ஒதுக்க மசோதாவைப் பொறுத்தவரைக்கும், விவாதமின்றி நிறைவேற்றுவது, இதுவரைக்கும் கடைபிடிக்கப்பட்டது இல்லை, விதிகளின்படியும் இல்லை, மரபுகளின்படியும் இல்லை. எனவே, அதை விவாதிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது நீங்கள் ஒழுங்குப் பிரச்சினை கிளப்பினீர்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: Sir, one minute. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவுப்படி, Appropriation Bill–ஐப் பொறுத்தவரைக்கும் விவாதமின்றி என்றுதான் முடிவு எடுக்கப்பட்டது. ஆனாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர்கள் விரும்பினால் விவாதத்தை நாம் ஏற்றுக்கொள்ளலாம். அதில் ஒன்றும் ஆட்சேபணை இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பார்க்கலாம், பார்க்கலாம்.